# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE KUCHCHAVELI DIVISIONAL SECRETARIAT DIVISION


By

MR. SELVARAJAH NITHYANANTHAN

Index No : COM 75


A dissertation submitted to the Faculty of Commerce and Management, Eastern University, Sri Lanka, as a partial fulfilment of the requirements of the Bachelor of Commerce degree (B.Com).


**DEPARTMENT OF COMMERCE**

**FACULTY OF COMMERCE AND MANAGEMENT**

**EASTERN UNIVERSITY, SRI LANKA**


**1996.**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அத்தியாயம் | - 01 | அறிமுகம் | 1-7 |
| அத்தியாயம் | - 02 | நூலாய்வு | 8-25 |
| அத்தியாயம் | - 03 | குச்சவெளி பிரதேச செயலக பிரிவு பற்றிய அறிமுகம் | 26-33 |
| அத்தியாயம் | - 04 | விவசாயம் | 34-45 |
| அத்தியாயம் | - 05 | கல்வி | 46-56 |
| அத்தியாயம் | - 06 | மீன்பிடி | 57-64 |
| அத்தியாயம் | - 07 | சுகாதாரம் | 65-73 |
| அத்தியாயம் | - 08 | சிறுகைத்தொழில் | 74-81 |
| அத்தியாயம் | - 09 | சுயதொழில் | 82-86 |
| அத்தியாயம் | - 10 | வீடமைப்பு | 87-93 |
| அத்தியாயம் | - 11 | கூட்டுறவு | 94-101 |
| அத்தியாயம் | - 12 | புனர்வாழ்வு | 102-108 |
| அத்தியாயம் | - 13 | புனரமைப்பு | 109-116 |
| அத்தியாயம் | - 14 | செயற்திட்ட வடிவமைப்பு | 117-127 |
| பின்னிணைப்பு | | அட்டவணை வரைபடம் | 128-131 |

உசாத்துணை நூல்களும், அடிக்குறிப்பும்

## ஆய்வறிக்கைச் சுருக்கம்

குச்சவெளி பிரதேச செயலக பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான அபிவிருத்தித் திட்டமிடலானது எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் எவ்வகையான அபிவிருத்தியைக் கொண்டிருக்கும் என்பது பற்றி பின்வரும் அம்சங்கள் தெளிவுபடுத்துகிறது.

இப்பிரிவு மக்களின் முக்கிய தொழிலாகவும், கூடுதலான மக்களையும் உள்ளடக்கியதாக விவசாயத்துறை காணப்படுகிறது. இவ் விவசாயச் செய்கைக்கென போதியளவு நிலங்கள் காணப்படுகின்றபோது உயர்ந்த விளைச்சல் இல்லாமலே காணப்படுகிறது . காரணம் பாரம்பரிய முறை, நீர்த்தேவை பற்றாக்குறை, விவசாயிகளுக்கான பயிற்சி இன்மையுமே. எனவே எதிர்காலத்தில் இவ் பற்றாக்குறையை நீக்கி ஏக்கருக்கான விளைச்சலை அதிகரித்தல்.

கல்வியின் நிலையானது பின்தங்கியதாகக் காணப்படுவதோடு சகல கிராம மாணவர்களும் கல்வியைக் கற்கக் கூடியதாக 24 பாடசாலைகள் காணப்படுகிறது இருந்தும் அடிப்படை வசதிகளான தளபாடம், கட்டடம், குடிநீர், மலசலகூட வசதிகள் பற்றாக்குறையாக உள்ளதோடு பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் நிலையும் குறைவாகவே உள்ளது. எனவே அடிப்படை வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கி எதிர்காலத்தில் கல்வியின் தரத்தை உயர்த்துவதாகும்.

இப்பிரதேசம் நீண்ட கடற்பரப்பைக் கொண்டுள்ளதால் ஆழ் கடல் மீன்பிடியே கூடுதலாக காணப்படுகிறது. இருந்தும் பாரம்பரிய முறையே பின்பற்றப்படுகின்றது. அத்தோடு மீன்களை பாதுகாக்கவும், ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து வசதி இன்மையும், நிதித் தேவைகளின் பற்றாக்குறையும். எனவே மீனவர்களுக்கான கடன் வசதியினை அளிப்பதோடு மீன் உற்பத்தியினை அதிகரிப்பதாம்.

சுகாதார வசதிகளை நோக்குகின்றபோது பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இருந்தும் வைத்திய வசதிகளை மேற்கொள்ள 2 கிராமிய வைத்தியசாலைகளும், மத்திய சிகிச்சை நிலையங்களும், ஆர்.எம்.பி. வைத்தியர்களும் காணப்படுகின்றனர். ஆனால் இவை இப்பிரதேச மக்கள் முழுதும் பயன்படுத்தக்கூடிய வசதிகளைக் கொண்டதாக இல்லை. எனவே எதிர்காலத்தில் வைத்திய வசதிகளையும் பொது சுகாதார வசதிகளையும் அதிகரித்தல்.

சிறுகைத்தொழிலானது பாரிய அளவில் காணப்படாவிடினும் ஓரளவு தொழில்கள் காணப்படுகின்றன. இவற்றிற்கான மூலப்பொருட்கள் இப்பிரதேசத்திலேயே கிடைக்கக்கூடியதாக உள்ளது. இருந்தும் இத் தொழிலினை மேற்கொள்ள மக்களின் ஆர்வம், சந்தைவாய்ப்பு குறைவு, இத்தொழில்களுக்கான ஊக்குவிப்புக்கள் குறைவாகவும் காணப்படுகின்றது. எனவே இவற்றை நிவர்த்திசெய்து சிறுகைத்தொழில் உற்பத்தியை அதிகரிப்பதாகும்.

கயிற்றொழிலை நோக்கும்போது குறைந்தளவு முதலுடன் முயற்சியில் ஈடுபடுவதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுகின்றது. அத்தோடு கயிற்றொழிலுக்கான தென்னைகள், இப்பிரதேசத்திலேயே கிடைப்பதனால் மேலும் தென்னைகளின் அளவினை விஸ்தரித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு கயிற்றொழில் உற்பத்தியினை அதிகரித்தல்.

வீடமைப்பு நடவடிக்கையானது ஓரளவு பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றபோதும் வீடமைப்புக்கான மூலப் பொருட்கள் இலவசமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. ஆனால் வருமானம் குறைந்தவர்கள் அதிகமாக உள்ளதால் சிறிய வீடுகளில் அதிகமானோர் தங்கியிருக்கின்றனர். வீடமைப்புத் திட்டங்கள் முழு கிராமத்தையும் உள்ளடக்கியதாக காணப்படவில்லை. இதனால் எதிர்காலத்தில் யாவருக்கும் புகலிடம் என்ற ரீதியில் வீடுகட்டிக் கொடுப்பதோடு கடன் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

கிராமிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவென பல கூட்டுறவு சங்கங்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் மக்கள் பல சேவைகளைப் பெறுகின்றனர். இருந்தும் ஊழல், மோசடிகள், குறைவு மட்டுப்படுத்தப் பட்ட சேவையே காணப்படுகிறது. எனவே கூட்டுறவு துறையினை விருத்தி செய்து மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்குதல்.

இப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு நடவடிக்கை மூலம் நிதி உதவிகளும், பொருள் உதவிகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் சில நிதி, பொருட்கள் சரியான முறையில் செலவு செய்யப்படாமல் உள்ளது. இதனால் எதிர்காலத்தில் இந் நிதி நடவடிக்கையினை சேமிப்பாகவும், சுயதொழில் முயற்சி நடவடிக்கைகளாகவும் செலவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.

பாதிக்கப்பட்ட வீடமைப்புக்கள், பொதுக் கட்டிடங்கள், சாலைகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றபோதும் ஒதுக்கீடு செய்யப்படும் பணம் மக்களால் தேவையற்ற முறையில் செலவு செய்யப்படுகிறது. அத்தோடு இப்பிரிவில் ஒதுக்கீடு பிரச்சினைகள் ஏற்படுவதால் புனரமைப்புக்கு உதவ சார்பற்ற நிறுவனங்கள் தயங்குகின்றன. எனவே புனரமைப்பு நடவடிக்கை நிதியை மக்களுக்கு மொத்தமாக வழங்காமல் கட்டமாக வழங்குவதோடு எல்லா சேவைகளையும் புனரமைப்புச் செய்தல்.

மேற்

எனவே மேலே உள்ள ஆய்வு செய்த திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் எதிர்காலங்களில் இப்பிரதேசத்தில் காணப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை அபிவிருத்தி செய்யக்கூடியதாக அமையும்.